மாலை முரசு

பக்கங்கள் 19+ 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 05 ஞாயிற்றுக்கிழமை 21.09.2025 | அதிர்வு 52

## தியாக தீபத்துக்கு சுமந்திரன் அஞ்சலி



02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இந்தியாவை மீறி மாகாண முறைமையை எவராலும் இல்லாது செய்துவிட முடியாது!

### வடக்கின் முன்னாள் உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவிப்பு தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவை மீறி மாகாண சபை முறைமையை எவராலும் இல்லாது செய்துவிட முடியாது என்று சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யும் மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தத் தேர்தலை விரைவாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண் 02▶

# ஜனாதிபதி நாளை அமெரிக்கா பயணம்

### உலகத் தலைவர்களை சந்திக்க ஏற்பாடு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை திங்கட்கிழமை இரவு அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் அவர் உரையாற்றவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். 02▶





# தியாக தீபத்துக்கு சுமந்திரன் அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நல்லூர் பின் வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள திலீபனின் ஆவணக் காப்பகத்துக்கு நேரில் சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அங்கிருந்த திலீபனின் திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தியதுடன் ஆவணக் காப்பகத்தையும் பார்வையிட்டார்.

தியாக தீபத்தின் நினைவுகளைத் தாங்கிய ஆவணக் காப்பகம் நேற்று சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், ஆவணக் காப்பகத்துக்கு நேரில் சென்று திலீபனுக்குச் சுமந்திரன் அஞ்சலி செலுத்தினார்.





## இந்தியாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்றும் வலியுறுத்தினர்.

“வன் டெக்ஸ்ட்” நிறுவனத்தின் அனுசரணையில், கடந்த வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், மாகாண சபையின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மாகாண சபையின் கடந்த கால அனுபவம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பான கருத்தரங்கு யாழ். றில்கோ விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன் பின்னர் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் க.சர்வேஸ்வரன், தமிழரசுக் கட்சி சார்பில் இ.ஆர்னோல்ட், ஈ.பி.டி.பி. சார்பில் வை.தவநாதன், புளொட் சார்பில் பா.கஜதீபன், ரெலோ சார்பில் சபா. குகதாஸ் ஆகியோர் இணைந்து ஊடக சந்திப்பை நடத்தினர்.

இதன்போது மேற்கண்டவாறு கூறிய அவர்கள், மேலும் தெரிவிக்கையில்,

”இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமான சந்திப்பாக இருந்தது. இதன்போது முக்கிய விடயமாக மாகாண சபைத் தேர்தல் பின்னோக்கிச் செல்வதற்கான ஏது நிலைகள் குறித்து அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலையில் இருந்து ஆராயப்பட்டது.

குறிப்பாக அனைத்து கட்சிகளுக்கும் சம உரிமை வழங்கி அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், இன்றைய அரசு மாகாண சபை முறைமையை விரும்பாத ஒன்றாகவே இருக்கின்றது.

கடந்த காலங்களில் இந்த அரசின் நிலைப்பாடு மாகாண சபை முறைமைக்கு எதிரானதாகவே இருந்தது.

குறிப்பாக தேர்தலைப் பழைய முறையிலா, புதிய முறையிலா நடத்துவது என்ற விவாதத்தைக் கையிலெடுத்து அரசுகள் காலத்தைத் தாழ்த்தி வருகின்றது.

புதிய முறைமை என்றால் எல்லை நிர்ணய முறைமையில் ஏற்பட்ட குறைபாடு நீக்கப்பட்டால் அல்லது சீர்செய்யப்பட்டால்தான் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளது.

ஆனால், பழைய முறைமையில் நடத்துவதாயின் அது இலகுவானது. நாடாளுமன்றில் அதற்கான அனுமதியைப் பெரும்பான்மையுடன் இந்த அரசு சுலபமாகப் பெற முடியும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் முழுமையான தீர்வாக மாகாண சபை முறைமை இல்லாதுவிடினும் அதுவே தீர்வின் ஆரம்பமாக இருக்கின்றது.

அதனால்தான் அரசுகள் மாகாண சபைத் தேர்தலை நடத்த அக்கறை காட்டுவதில்லை. அதையே இந்த அரசும் செய்கின்றது.

மாகாண சபை முறைமையானது தமிழ் மக்களுக்கு அவர்களது இருப்புடன் தொடர்புடைய ஒன்று. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு அது அவசியமற்றதாக இருக்கலாம்.

மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு விரும்பாவிட்டால் குறைந்த பட்சம் இதை வடக்கு, கிழக்கிலாவது நடத்த வேண்டும். இதை அனைத்து கட்சிகளும் ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றன.

எமது அரசியல் உரிமை குறித்து சர்வதேச சமூகம் பேசுகின்றது. இதை இந்திய அரசும் ஐ.நாவில் வலியுறுத்துகின்றது.

குறிப்பாக ஐ.நாவின் தற்காலிக வரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலுயுறுத்தப்படுகின்றது.

இதனால் இந்த விடயம் தற்போது சர்வதேச குரலாக இருக்கின்றது. அதனால் மாகாண சபை முறைமை நீக்கப்படாது. நீக்கப்பட்டால் இந்தியாவுடன் இலங்கை நேரடியாக மோதும் ஒரு சம்பவமாக உருவாகிவிடும். அதனால் மாகாண சபை முறைமையை நீக்க அரசு முயலாது.

அதேநேரம் புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு முழுமையாகக் கிடைக்குமாக இருந்தால் மட்டுமே மாகாண சபை முறைமையை இல்லாது செய்யும் சாத்தியம் ஏற்படும்.”


– என்றனர்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் இணைந்து கொள்வார்.



# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெருந்திருவிழா கொடியேற்றதுடன் ஆரம்பம்

(வடமராட்சி நிருபர்)

யாழ். வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பிரதம குரு கணபதீஸ்வரக் குரு தலைமையிலான குருமார் திருவிழா பூஜைகளை நடத்துகின்றனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 4ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 5ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 6ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 7ஆம் திகதி பட்டுத் தீர்த்தத் திருவிழாவும், 8ஆம் திகதி ஆஞ்சநேயர் மடையும் இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கான சுகாதார வசதிகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும், பருத்தித்துறை பிரதேச சபையும் மேற்கொண்டுள்ளன.

நிர்வாக ஒழுங்குகளை பருத்தித்துறை நீதிமன்ற பதிவாளர் தலைமையிலான குழுவும், ஏனைய பணிகளை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் மேற்கொண்டுள்ளன.

மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மேற்கொண்டுள்ளது.








# உயிருக்குப் போராடிய சிறுத்தை பாதுகாப்பாக மீட்பு!

(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)

அக்கரப்பத்தனை, ஆக்ரா கற்பாறை பள்ளத்தில் நீர் தேங்கியிருந்த பகுதியில் வீழ்ந்து உயிருக்குப் போராடிய சிறுத்தை ஒன்றை நுவரெலியா வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

சிறுத்தையைக் கண்ட பொதுமக்கள் அது பற்றி அக்கரப்பத்தனை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் மூலம் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள் கற்பாறை நீர்த்தேக்கத்தில் சிக்கி உயிருக்குப் போராடிய சிறுத்தையை, மூன்று மணி நேரப் போராட்டத்துக்கு மத்தியில் மீட்டனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த ரந்தெனிகல மிருக வைத்தியசாலை வைத்தியர் ஒருவர், வைத்திய பரிசோதனை மேற்கொண்டு சிறுத்தையின் பின் கால் மற்றும் வயிற்றுப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் அதைச் சிகிச்சைக்காக உடவலவ தேசிய மிருக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுமார் 6 வயதுடைய ஆண் சிறுத்தையே உயிருக்குப் போராடிய நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டது என்று நுவரெலியா வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உரிய சிகிச்சைகளின் பின்னர் சிறுத்தை வனப் பகுதியில் விடுவிக்கப்படவுள்ளது.




# கனகராயன்குளம் விபத்தில் பெண்ணின் மரணத்துக்குக் காரணமான வாகனம் மீட்பு

## சாரதி உட்பட இருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் பெண் ஒருவரை மோதிச் சாகடித்துவிட்டு தப்பிச் சென்றிருந்த வாகனம் மீட்கப்பட்டதுடன் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கடந்த 16ஆம் திகதி இரவு கணவருடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கச் சென்றிருந்தார்.

இதன்போது ஏ- 9 வீதியில் வைத்து வாகனம் ஒன்று அவரை மோதியதில் படுகாயமடைந்த அவர் உயிரிழந்திருந்தார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் நிறுத்தாமல் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தது.

சம்பவத்தில் அந்தப் பகுதியை சேர்ந்த ம.இதயரஞ்சினி என்ற 32 வயதான நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்திருந்தார்.




இது தொடர்பாக வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதனையடுத்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும் அதன் சாரதி மற்றும் உரிமையாளர் ஆகியோரையும் விசுவமடு பகுதியில் வைத்து வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர்.

வாகனத்தின் நிறம் உட்பட ஏனைய அமைப்புக்களை மாற்றியமைக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இந்தக் கைது இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக மற்றும் பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுராவின் ஒரு வருடம்

இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளில் இருந்தும் மாறி மாறி ஜனாதிபதிகள் ஆட்சிக்கு வந்த நாட்டின் சம்பிரதாயத்தை - சரித்திரத்தை - மாற்றி அமைத்து முதல் தடவையாக நிறைவேற்றதிகாரத்தைக் கைப்பற்றிய முதல் அரசியல்வாதி என்ற பெயரை ஈட்டியவர் அநுரகுமார திஸநாயக்கா.

தமது பதவிக்காலத்தின் முதலாவது ஆண்டை இந்த வாரத்தில் அவர் நிறைவு செய்கிறார். அவரது தற்போதைய பதவிக் காலத்தில் ஐந்து ஒரு பகுதி முடிவடைகின்றது.

அவர் முதல் வருடத்தைப் பூர்த்தி செய்கின்ற இந்த வாரத்தில் அச்சமயத்தில் அவர் ஐ.நாவில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருப்பார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்வு தொடர்பான தேர்தல்களில் முதல் தடவையாக, முதல் சுற்றில் வெற்றி பெறுவதற்கு தேவையான 50 வீத வாக்குகளைப் பெறாமல், 42 வீத வாக்குகளை மட்டும் பெற்றமையால் இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுத்த பின்னர் அவரது வெற்றி அறிவிக்கப்பட்டது.

நாட்டின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர், முப்படைகளின் சிரேஷ்ட தளகர்த்தர் ஆகிய பதவிகளை ஒரு வருடம் பூர்த்தி செய்துள்ள திஸநாயக்கா இந்தக் காலப் பகுதியில் ஆரவாரம் இல்லாமல் அதிகாரத்தைத் தொடர்ந்தவர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

49 வயதில் இப்பதவியை ஏற்ற சந்திரிகா குமாரதுங்கவுக்கு அடுத்து, வயதில் குறைந்த ஜனாதிபதி என்ற தகைமையை 55 வயதில் அப்பதவியை பெற்ற அவர் ஈட்டுகிறார்.

அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா என்பதை கணிப்பிடுவதற்கு ஒரு வருட ஆட்சிக் காலம் போதுமானது அல்ல என்றாலும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் திசையில் அவர் முன்நகர்கின்றாரா என்ற கேள்வியை ஆராய்வதற்கு இது பொருத்தமான கால கட்டம்தான்.

ஊழலுக்கு எதிரான அவரது வாக்குறுதிகள் பெரும்பாலும் ஆரவாரமாக்கப்பட்டிருக்கின்றன தவிர, அவை ஆழமாக முன்னெடுக்கப்படவில்லை என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டைக் கட்டி எழுப்புவதில் முன்னைய ரணில் அரசின் கொள்கைகளை எதிர்க் கட்சியில் இருந்தபடி காரசாரமாக விமர்சித்த அவர், இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் ரணில் அரசின் கொள்கைகளை அப்படியே மாற்றம் இன்றி பின்பற்றுகின்றமை அவரது கொள்கைத் தளம்பலாகக் கொள்ளப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கம், இணைய வழிப் பாதுகாப்புச் சட்ட மாற்றம் போன்றவை தொடர்பில் அவர் அளித்த வாக்குறுதிகள் ஆரவாரம் காட்டப்படுகின்றனவே தவிர நடைமுறைப்படுத்தப்படுவனவாகத் தெரியவில்லை.

மாகாண சபைத் தேர்தல், அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரப் பகிர்வு தொடர்பான ஏற்பாடுகளையாவது முழு அளவில் நடைமுறைப்படுத்துவது போன்றவை தொடர்பான அவரது வாக்குறுதிகளை குதிரை வண்டிலுக்கு முன்னால் கட்டிய கரட் போல கயிறு விடும் விவகாரங்களாகவே அவர் பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படையாகத் தென்படுகின்றது.

அரசியல்வாதிகளின் சொத்துக் குவிப்பு தொடர்பாக அவரும் அவரது அணியினரும் கூறிவந்த 'மிஸ்டர் கிளீன் போக்கு' அவரைச் சார்ந்த அரசியல்வாதிகளின் சொத்து விவர மதிப்பீட்டில் இப்போது அடிபட்டுப் போயிருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

அரசமைப்பு மாற்றம் தொடர்பான அவரது வாக்குறுதி ஆட்சிக் காலத்தின் இறுதிக்கு என்று தள்ளப்பட்டு விட்டது. நிறைவேற்றதிகாரத்தை ரசித்து, ருசித்து, பிரயோகிக்கும் அவரது ஈடுபாடு மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறவில்லை.

முன்னைய ஜனாதிபதிகள் ஒவ்வொருவருக்கும் பக்கத்திலும் வலிமையான - திறமை மிக்க - அரசியல்வாதிகள் இருந்தார்கள். ஜே.ஆருக்கு பக்கத்தில் காமினி திஸநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றோர். சந்திரிகாவுக்கும் மஹிந்தவுக்கும் பக்கத்தில் கதிர்காமர், சரத் அமுனுகம, மங்கள சமரவீர போன்றோர்.

ஆனால் அநுராவுக்குப் பக்கத்தில் 'கடிநாய்' போல பாயும் பிமல் ரத்நாயக்க போன்றோர்தான் முன்னுக்கு நிற்கின்றனர். வகுப்பறையில் குழப்படிகார மாணவனை 'மொனிட்டராக' நியமித்தமை போல ஒரு நியமனமாகவே இது தென்படுகிறது.

அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு ரில்வின் சில்வா போன்றோர் செய்யும் ஆதிக்க அரசியலை கட்டுப்படுத்த இயலாத ஒருவராகவே இதுவரையில் அநுரகுமார திஸநாயக்காவும் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றார்.

ஆக, அவரது ஒரு வருட ஆட்சி அவர் அதற்கு முன்னர் கூறி வந்த வாக்குறுதிகளின் படி முன்னேற்றகரமானதாகத் தென்படவில்லை என்பதுதான் உண்மை.





# சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய எழுதியுள்ள “உயிர்த்த ஞாயிறு தாக்குதல் - ஆழ்நிலை அரசும் மர்மங்களும்”

## நூல் அறிமுகமும் உரையும், உரையாடலும்


(பழுவூரான்)

பத்மநாபா அறிவாற்றல் கழகத்தின் ஒழுங்கமைப்பில், சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய எழுதிய “உயிர்த்த ஞாயிறு தாக்குதல் – ஆழ் நிலை அரசும் மர்மங்களும்” என்னும் நூல் அறிமுகமும் உரையும் உரையாடலும் நேற்று சனிக்கிழமை (20) மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

அரசியல் செயற்பாட்டாளர் எம். பீ.எம்.பிர்தௌஸ் நளீமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூல் மொழிபெயர்ப்பாளர் உரையைச் செல்லையா மனோரஞ்சன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் மகாலிங்கம் மனோதினி நன்றியுரையாற்றினார்.





# கல்வி நடவடிக்கைகள் மாத்திரமன்றி ஒழுக்கத்தையும் கற்பிக்க வேண்டும்!

### சம்மாந்துறை பிரதேச செயலாளர் முஹம்மது ஹனீபா தெரிவிப்பு

(சர்ஜுன் லாபீர்)

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மாத்திரமன்றி ஒழுக்க விழுமியங்களும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகளும் கற்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு கற்பிப்பதால் எதிர்காலத்தில் நிலைபேறான சமூகத்தைக் கட்டியெழுப்பலாம் என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

சம்மாந்துறை மற்றும் இறக்காமம் கல்விக் கோட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் உளவளத் துணை ஆசிரியர்களுக்கான பாடசாலை சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்த கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் சட்ட ரீதியாகவும் மாணவர்களின் ஒழுக்க விடயங்கள் சார்பாகவும், சமூகத்தில் இருக்கும் எதிர்பார்ப்புகள் ரீதியாகவும் அதிபர்கள், ஆசிரியர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நமது பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்ற ஒரு இடமாகவே நாம் உருவாக்கி இருக்கின்றோம். இது அதிபர்களதோ அல்லது ஆசிரியர்களதோ குறைபாடு இல்லை. மாறாக எமது சமூகம் ஒரு கல்லூரியை தரக் கணிப்பீடு செய்வதாக இருந்தால் அந்த பாடசாலையில் வெளியாகின்ற பெறுபேறுகளை வைத்துதான் கணீப்பீடு செய்து கொள்கின்றனர். ஆனால் முந்திய காலங்களில் அவ்வாறில்லை. ஒரு பாடசாலையில் கல்வி கற்பவர்களின் ஆளுமை விருத்தி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றிக் கணீப்பிடு செய்த பின்னர்தான் குறித்த பாடசாலையின் தரத்தை மதிப்பீடு செய்வார்கள்.

இன்றைய காலத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் பரீட்சை பெறுபேறுகளை மட்டுமே மையப்படுத்தி கல்வி கற்பிப்பதால் மாணவர்களின் மற்றுமொரு பக்கம் இல்லாமல் போகும் ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவாகின்றது.

2000 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் பாடசாலைகளில் கல்வியை மட்டும் கற்பித்தால் போதும் என்ற நிலை இருந்தது.அதேநேரம் ஏனைய ஒழுக்க விடயங்களை,ஆளுமைகளை கற்பிக்க சமூகம் தயார் நிலையில் இருந்தது.

அந்த காலகட்டத்தில் இருந்த சமூகக் கட்டமைப்பானது மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதற்கு,வழிப்படுத்துவதற்கு, நெறிப்படுத்துவதற்கு, கட்டுப்படுத்துவதற்கு தேவையான இயலுமையைக் கொண்டு இருந்தது.

குறிப்பாக முந்தைய காலத்தில் ஒரு பிள்ளையை முறையாகச் சமூக இணக்கப்பாட்டுடன் வாழவைக்கக்கூடிய சமூக மையக்கல்வியை கற்பிக்க கூடிய ஒரு பாரிய நிறுவனமாக "சமூகம்" காணப்பட்டது. அவ்வாறு ஒரு மாணவன் சமூக ரீதியாக புடம்போடப்பட்டுக் கல்வி ரீதியாக பாடசாலைகள் நல்ல கல்வியை புகுத்தியதால் கல்வி ரீதியாகக் கிடைக்கப்பட்ட அடைவுகளை எதிர்காலத்தில் சமூகத்துக்காகப் பயன்படுத்தக்கூடிய, ஒரு சமூக சிந்தனையாளனாக மாற்றக் கூடிய வாய்ப்பு அந்த காலகட்டத்தில் இருந்து வந்தது. ஆனால் அது இன்று மறுக்கப்பட்டுள்ளது என்பதனை நாம் ஏற்று கொள்ள வேண்டும்.

ஆனால் தற்போதைய காலகட்டத்தில் பாடசாலைகளின் பங்கு இரு மடங்காக மாற்றம் பெற்றுள்ளது. மாணவர்களுக்குக் கல்வியையும் போதிக்க வேண்டும். அதேவேளை, மாணவர்களை வளப்படுத்தியும் எடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பாடசாலைகளுக்கு இப்போது சுமத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் கல்விப்புலன் சார்ந்தோர்கள் மாத்திரம்தான் வரவேண்டும் என்கின்ற விடயம் இல்லாதொழிக்கப்பட்டு, மாணவர்களுக்கு தேவையான ஒழுக்க விடயங்கள், கல்வி விடயம் சாராத ஏனைய அனைத்து விடயங்களையும் வழங்குவதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் அரசால் பிரதேச செயலகங்களிலும், ஏனைய நன்னடத்தை காரியாலயங்களிலும் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே அவ்வாறான உத்தியோகத்தர்களைப் பயன்படுத்திக் கல்வி தவிர்ந்த ஏனைய விடயங்களை மேம்படுத்துவதற்கு அதிபர்கள் முன்வர வேண்டும். அதற்கு ஒரு முறையான ஒருங்கிணைப்பு செயற்பாடும் நேரப் பகிர்வும் அவசிய மாகும்.

எனவே அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை விருத்தி செய்ய வேண்டும்.– என்றார்.

# கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை நிவர்த்தி செய்ய வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் மயூரன் கோரிக்கை



(த.சுபேசன்)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையினுடைய ஆளணி மற்றும் ஏனைய வளப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் செ.மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த வைத்தியசாலையில் ஆறு வைத்தியர்களுக்கான தேவைப்பாடு உள்ள நிலையில் இரண்டு வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்றனர்.

அத்துடன் நான்கு தாதியர்கள் தேவையாக உள்ள நிலையில் எந்தவொரு தாதிய உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

அங்கு எந்தவொரு ஆண் சுகாதார ஊழியர்களும் இல்லாத நிலையில் அங்குள்ள பெண் சுகாதார ஊழியர்கள் விபத்து உள்ளிட்ட அனர்த்தங்களின் போது பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இயலாத நிலையில் உள்ள பெண் சுகாதார ஊழியர்களே அங்கு கடமையில் உள்ளனர்.

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் மாதாந்தம் 2500 நோயாளர்கள்வரை சிகிச்சை பெறுகின்றனர்.

கிளிநொச்சிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் அதிக தேவைப்பாடு உடைய வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலை உள்ளது.

வைத்தியசாலையின் சமையலறை மற்றும் ஏனைய கட்டடங்களும் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றன.எனவே வைத்தியசாலையின் தேவைப்பாடு கருதி உடனடியாக குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார்.

---

# கசிப்பு உற்பத்தி நிலையம் வீரமுனையில் முற்றுகை!



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை 03 பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று சனிக்கிழமை (20) சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரினால் முற்றுகையிடப்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

வீரமுனை 03 பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 60,000 மில்லிலிட்டர் கோடா, கசிப்பு 4,000 மில்லிலிட்டர், காஸ் சிலிண்டர் 2, ஒரு தொகை ரப்பர் மற்றும் செப்பு குழாய் என்பன மீட்கப்பட்டன.

சந்தேக நபர்கள் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைகளுக்காகச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.பிரதிப்குமார தலைமையிலான குழுவினரால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# விசேட தேவையுடைய ஒருவருக்கு மின்சாரத்தில் இயங்கும் ஓட்டோ!

**(உடப்பு க.மகாதேவன்)**

விசேட தேவையுடைய உடப்பு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வரெத்தினம் ரெகுனுகாந்தனுக்கு, அருள்-நாகநாதன் அறக்கட்டளை நிதியத்தின் ஊடாக, மின்சார மின்கலத்தில் இயங்கக் கூடிய ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதன் தலைவர் அருள் நாகநாதனால் நேற்று (20) திகதி சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

சுமார் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான மின்சார மின்கலத்தில் இயங்கக் கூடிய இந்தஓட்டோ உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலய முன்றலில் வைத்துவழங்கி வைக்கப்பட்டது.





# மன்னார் திருக்கேதீஸ்வர பாலாவி தீர்த்தக்கரை பகுதியில் மர நடுகை!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

பசுமை மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஓராயம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பாலவி தீர்த்தக்கரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகை நேற்று சனிக் கிழமை (20) இடம்பெற்றது.

ஓராயம் நிறுவனத்தின் தலைவர் மோசஸ் மரியதாசன் தலைமையில் திருக்கேதீஸ்வரம் ஆலய அறங்காவலர்கள், ஓராயம் நிதியம் மற்றும் மன்னார் வனத் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் குறித்த மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆரம்ப நிகழ்வுகள் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து தீர்த்தக்கரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக

# ஞானச்சுடர் 332 ஆவது மலர் வெளியீடும் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா உதவிகளும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்களின் தலைமையில், வெள்ளிக்கிழமை (19) சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் ஞானச்சுடர் 332 ஆவது மலர் வெளியீடு இடம்பெற்றது. அத்துடன் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஞானச்சுடர் ஆவணி மாத 332 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட்டுரையை சைவப்புலவர் பொன். சந்திரவேல் ஆசிரியரும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் இரா.ஶ்ரீநடராசாவும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

உதவித் திட்டங்களாக, ஜெயந்திநகர், கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள மகாதேவ ஆச்சிரமத்தின் கோரிக்கைக்கு அமைவாக, வடிவேல் சுவாமிகளின் சமாதிக் கோயில் புனருத்தாரனப் பணிக்காக 2 லட் ரூபா நிதி வழங்கப்பட்டது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, நவராத்திரி தின பரிசளிப்பு நிகழ்வுக்காக 20 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

பிரமந்தனாறு, விசுவமடு பகுதியை சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவனின் சிரார்த்த தின நிகழ்வுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.











# அமைதி பேசும் உலகம்...!

(உலக அமைதி தினம் செப்ரெம்பர் – 21)




விடியலின் மௌனம் போல் அமைதி விரியும்
புரிதலின் புன்னகை, மனிதம் பிறக்கும்
அவிழாத முடிச்சாய் இருக்கிறது வன்முறை
அதை அவிழ்க்கும் கயிறு பொறுமை, பாசத்தின் உறை

ஒரு துளி சினம் ஒரு தீயெனப் பரவும்
ஒரு சொல் அன்பு ஒரு சமாதானம் தரும்
கண்களில் சினம் இருந்தால் உலகம் சுடும்
இதயத்தில் அமைதி இருந்தால் வாழ்க்கை சிரிக்கும்

படைகள் அல்ல பாதுகாப்பு
புரிதல் தான் நம் காப்பு
நீ நான் என்று பிரிந்து சண்டை செய்யாதே
நாம் என்றெண்ணி மனிதநேயத்தைச் செய்!

பாசமும், பரிவும் பேசும் இடத்தில்
போருக்கு வாயில்லை, பிணைக்கு இடமில்லை
நாம் அமைதி தேடி நடந்தால்
புதிய பூமி உருவாகும் நாள் இன்றுதான்

**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.






# பெருந்தோட்ட சமூகத்தினருக்கு முறையான அஞ்சல் சேவை இல்லை

## மக்கள் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்

முறையான அஞ்சல் சேவையை பெருந்தோட்ட பகுதியில் ஏற்படுத்த அரச நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வமத குழுவின் தலைவர் கலாநிதி பிரமஸ்ரீ நந்தகுமார் குருக்கள் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட சமூகத்தினருக்கான அஞ்சல் சேவை அணுகலை மேம்படுத்துவதற்காக மத தலைவர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகத் தலைவர்கள், உள்ளூராட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் இணைந்து நடத்திய திறந்த கலந்துரையாடலின் பின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் சாலிக்கா லிதகும்புர, இலங்கை தேசிய சமாதான பேரவையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஜெஹான் பெரேரா, நுவரெலியா மாவட்ட சர்வமதக் குழுவின் இணைப்பாளர் திருமதி இரேஷா உதேனி, இலங்கை தேசிய அமைதி கவுன்சில் திட்ட மேலாளர் திருமதி நிரோஷா அந்தோணி, சிவில் அமைப்புகளின் தலைவர்கள், அஞ்சல் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட இளைஞர்கள், யுவதிகள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அங்கு நந்தகுமார் குருக்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட பகுதியில் முறையான தபால் சேவை நடைபெறாததால் பெருந்தோட்ட மக்கள் அனுபவிக்கும் சிரமங்களைப் பற்றி விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போது பெருந்தோட்டப் பகுதியில் இருந்து வருகை தந்தவர்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றி எடுத்து கூறினார்.

பெருந்தோட்ட மக்களுக்கு கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால் பாடசாலை மாணவர்கள் பரீட்சை எழுத முடியாமல் போனது என்றும் வங்கியிலிருந்து வந்த கடிதங்கள் தாமதமாக கிடைத்ததால் வங்கியில் ஈடுவைத்த நகைகளை மீண்டெடுக்க முடியாமல் போனதாகவும், தொழிலுக்கு விண்ணணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால் தொழில் வாய்ப்பை இழத்துள்ளனர் என்றும் பலர் தெரிவித்தனர்.

விசேடமாக நீதிமன்ற அழைப்பாணைக் கடிதம் கிடைக்காததால் ஒருவர் குறித்த திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவருக்கு பிடியாணை பிறப்பித்து அவரை கைது செய்து 21 நாள்கள் விளக்க மறியளில் வைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகையால் இந்தத் தபால் சேவையை பெருந்தோட்ட பகுதியில் விஸ்தரித்து பெருந்தோட்ட பகுதியில் வாழும் மக்களின் வீடுகளுக்கு தபால் விநியோகிக்க சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் அரசிடமும் இலங்கை தேசிய சமாதான பேரவையின் சார்பாகவும் சர்மத குழு உட்பட அனைத்து சிவில் சமூகம் சார்பிலும் வேண்டுக்கோள் முன் வைத்துள்ளோம்.இதற்கு இந்தப் புதிய அரசு ஒரு நல்ல வேலைத்திட்டத்தை ஏற்படுத்தித் தரும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.- என்றார்.



## இலங்கையில் சுற்றுலா பஸ் சட்டங்கள்:

# வெளிநாட்டவர்க்கு ஒரு சட்டம் உள்நாட்டவர்க்கு ஒரு சட்டமா?

மு.நிமியா.
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



இலங்கை தீவானது சுற்றுலாத்துறைக்கு புகழ்பெற்ற நாடாகும் வெளிநாட்டவர்கள் மட்டுமல்ல இலங்கையர்களும் தாம் வசிக்கும் இடங்களுக்கு அப்பால் நாடு முழுவதும் சுற்றுலா பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு தமது விடுமுறை நாள்களில் பலரும் நாட்டின் பிற பாகங்களுக்கும் சென்று வருவதற்காக சுற்றுலா பஸ்களைப் பயன்படுத்துகின்றனர். இது பெரும்பாலும் தனியார் பஸ்ஸாகவே காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில் சுற்றுலா பஸ்கள் அதிக அளவில் விபத்துக்குள்ளாவதைக் காண முடிகிறது. இலங்கையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பயணிக்கும் பஸ்ஸுக்கும், உள்நாட்டு சுற்றுலா பயணிகள் பயணிக்கும் பஸ்ஸுக்குமான சட்டங்கள் வேறுபட்டுள்ளன.

இலங்கையின் வீதிகளில் அண்மையில் நடந்த தொடர்ச்சியான, துரதிர்ஷ்டவசமான பஸ் விபத்துக்கள், தேசத்தின் போக்குவரத்து பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து கடுமையான விவாதங்களை எழுப்பியுள்ளன.

சமீபத்தில், எல்ல வெல்லவாயா வீதியில் ஒரு பஸ் விபத்துக்குள்ளானது. எல்ல வெல்லவாயா வீதியில், 24 ஆவது மைல் கல்லுக்கு அருகில் இந்த விபத்து நடந்தது. பேருந்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறும், பயணத்துக்கு அனுமதியளிக்கப்படாத பஸ்ஸைச் செலுத்தியதுமே விபத்துக்கான காரணம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

இந்த பஸ் சுமார் 1,000 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது. இவ்விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர். இத்தகைய விபத்துக்களுக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவ்வாறு முறையற்ற விதத்தில் பஸ்கள் செலுத்தப்பட்டு விபத்துக்குள்ளாவதற்கு கடுமையான சட்ட நடவடிக்கைகள் இல்லாமையும் ஒரு காரணமாகும்.

இலங்கையில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கு உள்ளதைப் போன்ற தனித்துவமான மற்றும் கடுமையான சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பொதுவாக இல்லை.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சட்டங்களும் நடைமுறைகளும் பெரும்பாலும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது, இலங்கையின் நற்பெயரைப் பாதுகாப்பது, மற்றும் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்வது போன்ற நோக்கங்களுக்காகவே உருவாக்கப்பட்டன.

உள்நாட்டு பஸ் சேவைகளுக்கான சட்டங்கள், தனியார் மற்றும பஸ்கள் உட்பட, பொதுப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், உள்ளூர் மக்களின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதி செய்வதற்கும் கவனம் செலுத்துகின்றன. எனினும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்குக் கடுமையான சட்டங்களை விதிக்காமையே பல முறையற்ற விபத்துகள் ஏற்படக் காரணமாகின்றது.

இலங்கையில் சுற்றுலா பஸ் தொடர்பான பொதுவான பஸ் போக்குவரத்துச் சட்டங்களுக்கு மேலதிகமாகச் சில குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் உள்ளன. இவை சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் தரமான சேவையை உறுதி செய்வதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் போன்ற நிறுவனங்களால் உருவாக்கப்பட்டவை.

சுற்றுலா பஸ்களுக்குப் பொருந்தும் சில தனிச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் சுற்றுலா அனுமதிப்பத்திரம் – சாதாரண பஸ் கள் ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். ஆனால் சுற்றுலாப் பேருந்துகள் நாடு முழுவதும் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல சிறப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். இந்த அனுமதிப் பத்திரம் ஒரு குறிப்பிட்ட பயணத் திட்டத்துக்கு ஏற்ப தற்காலிகமாக வழங்கப்படலாம். அல்லது ஒரு வருடத்துக்கு வழங்கப்படலாம். இந்த அனுமதிப்பத்திரம் இல்லாமல் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வது சட்ட விரோதமானது.

வாகனத் தரம் மற்றும் பாதுகாப்பு – சுற்றுலாப் பஸ்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும். வாகனத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் சுத்தமாகவும், சேதங்கள் இல்லாமலும் இருக்க வேண்டும்.

தீயணைப்பான், முதலுதவிப் பெட்டி போன்ற அவசரக் கால உபகரணங்கள் பஸ்ஸில் கட்டாயம் இருக்க வேண்டும்.

வாகனத்தில் போதுமான இருக்கைகள் இருக்க வேண்டும், மேலும் இருக்கை பெல்ட்கள் பொருத்தப் பட்டிருக்க வேண்டும்.

காற்றோட்டத்துக்கான வசதிகள் மற்றும் குளிரூட்டிகள் சரியாக இயங்க வேண்டும்.

சாரதிகளுக்கான விதிமுறைகள் – சுற்றுலா பஸ்களை ஓட்டும் சாரதிகள் அனுபவமிக்கவர்களாகவும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

சாரதிகள் பயணிகளுடன் மரியாதையுடன் பழக வேண்டும். அவர்களுக்குச் சரியான சீருடை மற்றும் தேசிய போக்குவரத்து சபையின் பதிவு அட்டை வழங்கியிருக்க வேண்டும்.

வாகன சாரதியின் பெயர் மற்றும் அவசர தொடர்பு எண்கள் பஸ்ஸில் உள்ளே தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

சேவைகள் மற்றும் பயணிகளின் வசதிகள் இருத்தல் வேண்டும். சுற்றுலாப் பஸ்களில் நிர்ணயிக்கப்பட்ட ஆசனங்களுக்கு மேலாக நின்று பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஒலி சாதனங்கள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இயக்கப்பட வேண்டும்.

சுற்றுலா வழிகாட்டிகள் இல்லாமல் சாரதிகள் வழிகாட்டுநர்களாகச் செயல்படக் கூடாது. அதற்குத் தனி அனுமதி மற்றும் தகுதிகள் அவசியம்.

இந்த விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் சுற்றுலாப் பயணிகள் ஒரு பாதுகாப்பான, இனிமையான மற்றும் தரமான பயண அனுபவத்தைப் பெறுவதை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டவை.

தொடர்ச்சி▼

# வெளிநாட்டவர்க்கு ஒரு சட்டம் உள்நாட்டவர்க்கு ஒரு சட்டமா?

தொடர்ச்சி▲

சுற்றுலாத் துறையின் நற்பெயரைப் பாதுகாக்கவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் சுற்றுலாப் போக்குவரத்துத் துறையை ஒழுங்கமைக்கவும் இவை உதவுகின்றன.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பயணிக்கும் பேருந்து தொடர்பான சட்ட விதிமுறைகள் இவ்வாறு கடுமையாக காணப்பட்டாலும் கூட உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், பயணிக்கும் சாதாரண பஸ்களுக்குப் பொது பஸ் சட்டங்களே உரித்தாகின்றன.

இலங்கையில் பஸ் போக்குவரத்து தொடர்பான சட்டங்களும் நடைமுறைகளும் ஒரு சில முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

அவற்றுள் பொதுப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது, தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கு இடையே சமநிலையை பேணுவது போன்றவை உள்ளடக்கியுள்ளன.

சாதாரண தனியார் பஸ்சுக்கான முக்கிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பயண அனுமதிப்பத்திரங்கள் இலங்கையில் பஸ் சேவைகளை நடத்துவதற்கு போக்குவரத்து அமைச்சகத்திடமிருந்து பஸ்கள் பயண அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். இந்த அனுமதிப் பத்திரங்கள் ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் மட்டுமே பஸ்கள் இயங்க அனுமதிக்கின்றன. குறிப்பிட்ட வழியில் மட்டுமே பஸ்களை இயக்குவதன் மூலம், போட்டி தவிர்க்கப்படுகிறது, மற்றும் சேவையின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

பயணக் கட்டணங்கள் – பஸ் பயணங்களுக்கான கட்டணங்கள் போக்குவரத்து அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. தனியார் பஸ்களுக்கு ஒரு கட்டணமும், இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கு சற்றுக் குறைவான கட்டணமும் வசூலிக்கப் படுவதுண்டு. பயணிகளிடமிருந்து கூடுதல் கட்டணம் வசூலிப்பது சட்டப்படி குற்றம்.

வேக கட்டுப்பாடு – நாட்டின்சாலைகளில் பஸ்களுக் கான வேக வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, நகர்ப்புறங்களில் 40 கிலோ மீற்றர் ஆகவும், பிரதான வீதிகளில் 70 கிலோ மீற்றர் ஆகவும் வேக வரம்பு இருக்கலாம். அதிக வேகமாக பஸ்களை ஓட்டுவது போக்குவரத்து விதிகளை மீறுவதாகும்.

ஆசன எண்ணிக்கை– பஸ்களில் பயணிக்கக்கூடிய ஆசனங்களின் எண்ணிக்கை மற்றும் நிற்கும் பயணிகளின் எண்ணிக்கை குறித்த விதிமுறைகள் உள்ளன. இது பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் பயணிகளை ஏற்றுவது சட்டவிரோதமானது.

நடைமுறைகள் மற்றும் அமலாக்கம் –வாகன சோதனை ஒவ்வொரு வருடமும் – பஸ்கள், பயணிகளின் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப தரங்களைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதை உறுதி செய்ய, வாகனப் போக்குவரத்து திணைக்களத்தால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

சீரான சேவை – பயண அனுமதிப்பத்திரம் பெற்ற வழித்தடங்களில் பஸ்கள் சீரான இடைவெளியில் இயக்கப்பட வேண்டும். சரியான நேரத்துக்குப் பஸ்கள் வந்து செல்வதை உறுதி செய்ய இது அவசியமானதாகும்.

தகவல் பலகைகள் – அனைத்து பஸ்களிலும் சேவை செய்யும் வழித்தட இலக்கம், தொடங்கும் மற்றும் முடியும் இடம், மற்றும் கட்டண விவரங்கள் தெளிவாகக் காட்சிப்படுத்தப்படவேண்டும். இது பயணிகளுக்குத் தகவல் வழங்கவும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் உதவுகிறது.

சட்ட அமலாக்கம் – இலங்கை பொலிஸ் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இந்த சட்டங்களை அமல்படுத்துகின்றன. விதிமீறல்க ளுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது, மற்றும் சில சந்தர்ப்பங்களில் பயண அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படலாம். பொதுப் போக்குவரத்து சட்டங்கள் உள்நாட்டு சுற்றுலாப் பஸ்கள், பயண அனுமதிப் பத்திரங்கள், வேகக் கட்டுப்பாடு, ஆசன எண்ணிக்கை, வாகனப் பராமரிப்பு போன்ற பொதுப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பொதுவான விதிமுறைகளுக்கு உட்பட்டவை.

இவை வெளிநாட்டுப் பயணிகளுக்காக பிரத்தியே கமாக உருவாக்கப்பட்டவை அல்ல. இவ்வாறு சாதாரண சட்டங்கள் காணப்பட்டாலும் கூட அதனை இலங்கை மக்களும் பஸ் சாரதிகளும் சரிவர பின்பற்றுவது மிகவும் அரிதாகவே உள்ளது. இலங்கையின் பொதுப் போக் குவரத்தில், குறிப்பாக தனியார் பஸ்களில், வாகனங்களை அலங்கரிப்பதற்காக அதிக ஒலியுள்ள ஒலி அமைப்புகள், பல வண்ணங்களில் ஒளிரும் விளக்குகள், அபாயகரமான விளக்குகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்படாத பாகங்கள் பொருத்துவது நீண்ட காலமாக வழக்கத்தில் உள்ளது. சில சமயங்களில், இந்த மாற்றங்கள் வாகனத்தின் இயல்பான வடிவமைப்பையும், பாதுகாப்புத் தரங்களை யும் கடுமையாக பாதிக்கின்றன. விபத்துக்கள் ஏற்படும் போது, இதுபோன்ற மாற்றங்கள் சாரதியின் கவனத்தை திசைதிருப்புதல், மற்ற சாரதிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறு விளைவித்தல் மற்றும் அவசர சேவைகளைத் தடுத்தல் போன்ற பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இந்த பின்னணியில், அரசின் புதிய மற்றும் கடுமையான சட்ட நடவடிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதன் அவசியத்தை உணர்த்துகிறது.

அரசின் பொறுப்புக்கு அப்பால் ஒரு பயணி என்ற வகையில் தனது தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சில நடைமுறைகளிலேயே பொதுமக்கள் பின்பற்றுவது சிறந்த விடயமாகும். இலங்கையின் பஸ் போக்குவரத்துகளில் ஏற்படும் சிக்கல்களுக்கு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்வதற்கான விசேட அழைப்பு இலக்கங்கள் உள்ளன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு – தனியார் பஸ்களுக்கான அவசர அழைப்பு இலக்கமான 1955 என்ற இலக்கம் 24 மணி நேரமும் இயங்கும். வாட்ஸ்அப் இலக்கம் 0712595555 புகைப்படங்கள், ஆடியோ அல்லது வீடியோகோப்புகளை அனுப்பலாம். மற்றும் இலங்கை போக்குவரத்து சபை, அரச பஸ்களுக்கான அவசர அழைப்பு இலக்கம் 1958 ஆகும். இந்த இலக்கங்களைப் பயன்படுத்தி, கட்டணம் அதிகமாக வசூலித்தல், பயணச் சீட்டு வழங்காமல் இருத்தல், வண்டியின் தவறான நடத்தை அல்லது வேறு ஏதேனும் முறைகேடுகள் குறித்து நீங்கள் முறைப்பாடு செய்யலாம்.

உங்கள் முறைப்பாட்டினைப் பதிவு செய்யும்போது, பஸ்ஸின் பதிவு இலக்கம், வழித்தட இலக்கம், மற்றும் சம்பவத்தின் நேரம் போன்ற தகவல்களை வழங்குவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஒரு சிறந்தபோக்குவரத்து நடைமுறைக்கு சட்டங்க ளும் சரிவர உருவாக்கப்பட வேண்டும் அதே நேரத்தில் சட்டங்களை கடைபிடிக்கும் பொது மக்களும் சாரதிகளும் சரிவர சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மாத்திரமே விபத்துகளையும் உயிரிழப்புகளையும் தடுக் முடியும்.

# மனிதநேயம், உளவியல் சமூக விழிப்புணர்வு!

**(உலக அமைதி தினம் செப்ரெம்பர் 21 )**

உலக அமைதி தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது ஒரு சாதாரண தினமாக இல்லாமல், மனித சமூகங்களின் நம்பிக்கை, ஒற்றுமை மற்றும் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். அமைதி என்பது வெறும் வன்முறை இல்லாமை மட்டும் அல்ல. அது மன அமைதி, சமூக ஒற்றுமை, நெறிமுறை, மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய பொறுப்புத் தொடர்புகளின் கலவையாகும்.

உளவியல் ஆய்வுகள் காட்டும் விதமாக ஒரு சமூகத்தில் அமைதி நிலவும்போது அதன் உறுப்பினர்கள் மனநலம் மற்றும் சமூக நம்பிக்கையில் அதிகமான செல்வாக்கைக் காண்பிக்கின்றனர்.

மனிதர்கள் மன அழுத்தம், கவலை, வெறுப்பு, மற்றும் சமூக விலகல் போன்ற உளவியல் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதை ஆராய்ச்சிகள் தெளிவாக கூறுகின்றன.

உலக அமைதி தினத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று வன்முறையற்ற சமூகங்களை உருவாக்குவதாகும்.

வன்முறை மற்றும் மோதல்கள் அதிகமாக உள்ள இடங்களில் மக்களின் மனநலம் பாதிக்கப்படும். மனஅமைதி இல்லாத சூழல் அதிகமான மன அழுத்தத்தை, தனிமையை, மனச்சோர்வை, மனஅழுத்தத்தை உருவாக்கும். அதனால், உலக அமைதி தினத்தின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மனிதர்களின் மனநலத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மாணவர்கள், பெரியவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் ஒரே நாளில் அமைதி, மனஅமைதி, சகிப்புத்தன்மை மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அத்தகைய நடைமுறைகளை தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வார்கள்.

உலகளாவிய ரீதியில் அமைதி தினம் ஐக்கிய நாடுகள் சார்பில் பல்வேறு நாடுகளில் செயல்படுகின்றது. உலக அமைதி தினத்தை முன்னிட்டு நடக்கும் கருத்தரங்குகள் ஆராய்ச்சி செயலிகள் மற்றும் சமூக விழிப்புணர்வு பிரசாரங்கள் உலக நாடுகளின் மக்கள் மனதில் அமைதி பற்றிய உணர்வை வளர்க்கின்றன. மன அமைதி பற்றிய உளவியல் ஆய்வுகள், அமைதி தின விழிப்புணர்வு செயல்கள், மற்றும் சமூக பணிகள் இணைந்து செயல்படும் போது, இது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்கள் தினசரி வாழ்கையில் உளவியல், மனநல மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள்.

இலங்கையில் அமைதி தினம் மிக முக்கியமானது. கடந்த காலத்தில் ஏற்பட்ட மோதல்கள், கலவரங்கள் மற்றும் சமூகப் பிரிவினைகள் ஒட்டுமொத்த சமூகத்திலும் மனநல பிரச்சினைகளை உருவாக்கியிருக்கின்றன. தற்போது, இந்நாடுகளில் அமைதி தினம் மக்கள் மனதில் அமைதியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு விழிப்புணர்வுக்க கருவியாகச் செயல்படுகிறது. இதற்காக அரசு, கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் தொலைத்தொடர்பு ஊடகங்கள் ஒருங்கிணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவரும் அமைதி மற்றும் சகிப்புத்தன்மையின் அடிப்படைகளை உணர்ந்து கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்படுகின்றன.

உளவியல் நோக்கில், அமைதி தினம் மக்கள் மனதில் நேர்மறை உணர்வுகளை ஊட்டுகிறது. அமைதி மற்றும் மனஅமைதி பற்றிய பயிற்சிகள், கவனிப்புத்திறன் மனச்சோர்வைக் குறைக்கும் செயல்பாடுகள் மற்றும்



சமூக நம்பிக்கையை வளர்க்கும் பயிற்சிகள் மக்கள் மனநலத்தில் நேரடி மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அவர்கள் அமைதியான மனநிலை மற்றும் சமூக ஒற்றுமையைக் கற்றுக் கொண்டு, எதிர்காலத்தில் சமூகத்தில் பொறுப்புமிக்க மற்றும் மனநலம் சிறந்த உறுப்பினர்களாக வளர்ந்து, நாட்டின் ஒற்றுமை மற்றும் அமைதியை நிலைநாட்ட உதவுகின்றனர்.

உலக அமைதி தினம் தொடர்பான ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. சமூகங்கள் அமைதி நிலைப்பாடு பெற்றுள்ள இடங்களில் மக்கள் மனநலம், சமூக நம்பிக்கை, பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி முன்னேற்றம் ஆகியவை உயர்ந்திருப்பதன் மூலம், அமைதி ஒரே ஒரு நாட்டுக்கே அல்ல, உலகளாவிய சமுதாயத்துக்கும் மிக முக்கியமானது என்பதை உணர்த்துகின்றது.

அமைதி தினம், சமூகங்களில் அமைதியை வலுப்படுத்தும் வகையில் மனஅழுத்தம் குறைக்கும் மற்றும் உளவியல் நலனை மேம்படுத்தும் வழிகளைக் காட்டும் விழிப்புணர்வாகச் செயல்படுகிறது.

சமூகத்தின் நலனில் அமைதி தினம் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் ஒருவருடன் ஒருவர் மதிப்பும், அன்பும், பகிர்வு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தால் அது சமூகத்தில் கலவரம், வன்முறை, இனவெறி மற்றும் விரோதங்களை குறைக்கும்.

சமூக உளவியல் ஆய்வுகள், அமைதி உணர்வு அதிகமான சமூகங்களில் மக்கள் மனநலன், சமூக நம்பிக்கை மற்றும் உளவியல் சுறுசுறுப்பில் மேம்பாடு காணப்படுவதைத் தெளிவாக காட்டுகின்றன.

அமைதி தினத்தின் சிறப்பு நோக்கங்களில் ஒன்று உலகளாவிய ஒற்றுமையை உணர்த்துவதாகும். உலகம் முழுவதும் மக்கள் ஒரே நாளில் அமைதி, சகிப்புத்தன்மை, சமூக ஒற்றுமை, மற்றும் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை உணர்கிறார்கள். இது உலகின் ஒவ்வொரு மக்களையும் ஒரு குடும்பமாக இணைக்கிறது என உளவியல் ஆய்வுகள் காட்டுகின்றன. மக்கள் அமைதியான சூழலில் உள்ள போது அவர்களின் மனஅமைதி, சிந்தனைத்திறன், சமூக நம்பிக்கை மற்றும் பொது மக்கள் குறைபாடுகளை சீரமைக்கும் திறன் அதிகரிக்கிறது.

சமூக விழிப்புணர்வு தொடர்பாக உலக அமைதி தினம் மக்கள் மனதில் அமைதியை வளர்க்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். மக்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மதிப்பும் காட்டும் நடைமுறைகளை ஏற்றுக் கொள்வார்கள்.

மனஅழுத்தம் குறையும் – மனநலம் மேம்படும் – சமூக ஒற்றுமை வலுப்படும் – இது உலக அமைதி தினத்தின் முக்கிய தாக்கம் ஆகும்.

இவ்வாறே உலக அமைதி தினம் உலகளாவிய சமூக மற்றும் உளவியல் நோக்கில் மிக முக்கியமான

தொடர்ச்சி▼

# மனிதநேயம், உளவியல் சமூக விழிப்புணர்வு!

தொடர்ச்சி▲

நாள். இலங்கையில் மற்றும் உலகின் பல நாடுகளில் இதன் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மக்கள் மன நலத்தை, சமூக ஒற்றுமையை, சகிப்புத்தன்மையை மற்றும் உலகளாவிய பொறுப்பை வளர்க்க உதவுகின்றது. இது மனிதநேயம், சமூக நலன் மற்றும் மன அமைதியை ஒருங்கிணைக்கும் ஒரு விழிப்புணர்வு தினமாக அமைகிறது.



**நடராசா கோபிராம்**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.





# அம்பாறை - கல்முனை - காரைதீவை இணைக்கும் மாவடிப்பள்ளி பெரிய பாலம் புனர்நிர்மாண ஆரம்பம்!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை – கல்முனை காரைதீவு இணைக்கும் மாவடிப்பள்ளி பெரிய பாலம் புனர்நிர்மாண அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சனிக்கிழமை (20) மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து சேவைகள் அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான அமைச்சர் விமல் ரத்நாயக்க பிரதம அதிதியாகவும், கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் தோழர் வசந்தபியதிஸ்ஸ கௌரவ அதிதியாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்து ரத்துவத்தை, மஞ்சுல ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்தப் பாலமானது சுமார் 90 வருடம் பழமை வாய்ந்த பாலம். மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைய இந்தப் பாலமானது புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பாலம் சுமார் 247 மில்லியன் ரூபா நிதியில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பி. அலியார், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள், தேசிய மக்கள் சபையின் பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பாஜகவை தடுத்து நிறுத்தும் ஆற்றல் தி.மு.கவுக்கு மட்டும்தான் இருக்கிறது

## மக்களின் கேள்விகளுக்கு முதல்வர் ஸ்டாலின் பதில்

ஆனுபவம், வலிமை, கொள்கை தெளிவுடன் பா.ஜ.கவை தடுத்து நிறுத்தும் ஆற்றல் தி.மு.கவுக்கு மட்டுமே இருக்கிறது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மக்களுடன் ஸ்டாலின் செயலி வாயிலாக முதல்வர் ஸ்டாலினுக்கு பொதுமக்கள் கேட்ட கேள்விகளு அவர் பதிலளிக்கையில்,

அண்மையில் மேற்கொண்ட வெளிநாட்டு பயண அனுபவங்கள் பற்றி சொல்ல முடியுமா, தொழில் முதலீட்டாளர்களிடம் தமிழகம் பற்றிய பார்வை எப்படி இருக்கிறது?

“தமிழகத்தின் கட்டமைப்புகள், இங்குள்ள திறமையான இளைஞர்கள் பற்றியும், மாணவர்களுக்கு வழங்கப்படும் திறன் மேம்பாடு பயிற்சிகள் குறித்தும் ஜேர்மனி முதலீட்டாளர்களுக்கு காட்சி விளக்கங்கள் அளித்தோம். தமிழகத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் அளிக்கப்படும் முக்கியத்துவத்தை முதலீட்டாளர்கள் பெருமையுடன் கூறினார்கள். புதிதாக வளர்ந்து வரும் துறைகள் மீது தமிழகம் கவனம் செலுத்துவதையும் அவர்கள் அதிகமாகவே பாராட்டி பேசினார்கள். அந்தவகையில், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் முதலீடுகள் செய்ய அவர்கள் ஆர்வமாக உள்ளனர்.”

ஒக்ஸ்போர்டுக்கு சென்றது பற்றியும், வெளிநாடு வாழ் தமிழர்களைச் சந்தித்தது பற்றியும் உங்களின் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?

“ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பெரியாரின் படத்தை திறந்து வைத்து, அவரை பற்றி பேசியபோது எனக்கு மெய்சிலிர்த்துவிட்டது. ஜேர்மனி, லண்டனில் உள்ள தமிழர்கள் பலர், இடஒதுக்கீட்டில் படித்து முன்னேறியவர்கள் என்றும், கருணாநிதி முதல் தலைமுறை பட்டதாரி கல்வி கடனை ரத்து செய்ததுதான் இந்தளவு முன்னேறி வரக் காரணம் என்றும் தெரிவித்தார்கள். பல மறக்க முடியாத அனுபவங்களை ஐரோப்பிய பயணம் கொடுத்துள்ளது.”

தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று எதற்கு சொல்கிறீர்கள்?

“நீட், இந்தி திணிப்பு, கீழடி அறிக்கையை மறைப்பது என பா.ஜ.க. தமிழகத்தை பல வகையில் குறி வைக்கிறது. பா.ஜ.கவை எதிர்ப்பதாக வெளியில் பலர் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், அனுபவம், வலிமை, கொள்கைத் தெளிவுடன் பா.ஜ.கவை தடுத்து நிறுத்தும் ஆற்றல் தி.மு.கவிடம் மட்டும் தான் இருக்கிறது. தி.மு.க. ஆட்சி நீடித்தால் தான் தமிழகம் தொடர்ந்து தலை நிமிர்ந்து நடக்க முடியும்.” என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் மோசமான ஆட்சி நடப்பதால் தி.மு.கவை மட்டும் விஜய் தாக்கவேண்டும்

## தமிழிசை கருத்து



தமிழகத்தில் மோசமான ஆட்சி நடந்து கொண்டிருப்பதால் விஜய்யின் தாக்குதல் தி.மு.க. மீது மட்டுமே இருக்க வேண்டும் என தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“காசாவில் நடக்கும் பிரச்சினைக்கு பிரதமர் மோடிதான் காரணம் எனச்சொல்லி மிகவும் கீழ்த்தரமான அரசியலை சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போது அவர்கள் எங்கு சென்றார்கள். கள்ளக் குறிச்சியில் சாராயம் குடித்து இறந்தார்களே அப்போது எங்கே போனார்கள்? இதை பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை.

ஆணவப்படுகொலை நடக்கும் போது அதைப்பற்றி பேச ஆள்இல்லை. முன்பு அடுத்த மாநிலத்தை பற்றி பேசி கொண்டிருந்தார்கள். இப்போது அடுத்த நாட்டை பற்றி பேச போய்விட்டார்கள். முதலில் தமிழகத்தில் நடக்கும் அவலங்களையும், மக்கள் விரோத பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். காங்கிரஸை தி.மு.கதான் அடிமைப்படுத்தி வைத்துள்ளது. நாங்கள் கேட்கும் தொகுதிகளை கொடுக்கவில்லையென்றால், கூட்டணியில் இருந்து வெளியேவருவோம் என சொல்லும் அளவுக்கு காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு துணிச்சல் இருக்கிறதா?

அவர்களால் ஒற்றுமையாக தேர்தலை சந்திக்க முடியாது. தமிழகத்தில் மிக மோசமான ஆட்சிநடந்து கொண்டிருக்கிறது. எனவே, விஜய்யின் தாக்குதல் தி.மு.க. மீது மட்டுமே இருக்கட்டும். அவர்களை வீட்டுக்கு அனுப்புவதில் விஜய்யின் பங்கும் இருக்க வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

# எச்1-பி விசா விண்ணப்பக் கட்டணத்தை ஒரு லட்சம் டொலராக உயர்த்தினார் ட்ரம்ப்



எச்1பி விசா வைத்திருப்போர் 14 நாள்களுக்கு அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டாம் என முன்னணி நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டெனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றது முதல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

இந்தநிலையில், அமெரிக்காவில் தங்கி பணிபுரியும் வெளிநாட்டினருக்கு வழங்கப்படும் எச்1-பி விசா விண்ணப்பிக்கும் முறையில் கட்டுப்பாடுகளை சில நாள்களுக்கு முன்பு அவர் விதித்தார்.

அதிக திறமை உள்ள பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் எச்1-பி விசாக்களுக்கான விண்ணப்பக் கட்டணத்தை ஒரு லட்சம் அமெரிக்க டொலர் உயர்த்தி ட்ரம்ப் அதிரடி மாற்றத்தை கொண்டு வந்துள்ளார்.

இதனடிப்படையில், உயர் திறமையான வெளிநாட்டு பணியாளர்களுக்கான திட்டத்தில் எச்-1பி விசா விண்ணப்ப கட்டணத்தை ஒரு லட்சம் டொலர்களாக உயர்த்தும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தநிலையில், எச்1-பி விசா கட்டண உயர்வு இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இந்த பின்னணியில் எச்1பி விசா வைத்திருப்போர் அனைவரும் குறைந்தது 14 நாள்களுக்கு அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், வெளிநாடுகளில் வசிக்கும் ஊழியர்கள் 24 மணி நேரத்துக்குள் அமெரிக்கா திரும்ப வேண்டும் எனவும் மெட்டா மற்றும் மைக்ரோசாப்ட் போன்ற முக்கிய நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை அடுத்த வாரத்தில் சந்திப்பேன்

## ஜெலன்ஸ்கி தகவல்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை அடுத்த வாரத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தின்போது சந்திக்க உள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தி உள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து வரும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அந்நாட்டுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளார்.

நேற்று முன்தினம் ஒரே இரவில் உக்ரைன் மீது 40 ஏவுகணைகள் மற்றும் 580 ட்ரோன்களை ரஷ்யா ஏவியதாக ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் இந்த சரமாரியான தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என தனது எக்ஸ் பக்கத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை வலியுறுத்த இருப்பதாக ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

மேலும், ரஷ்யாவைக் கட்டுப்படுத்த அந்த நாட்டுக்கு எதிராக கூடுதல் பொருளாதார தடைகளை விதிக்க வலியுறுத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான சந்திப்புக்கு நான் தயாராக இருக்கிறேன். இது குறித்து நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இருதரப்பு பேச்சுவார்த்தை அல்லது முத்தரப்பு பேச்சுவார்த்தை இரண்டுக்கும் நான் தயார். ஆனால், அவர்தான் தயாராக இல்லை.

தலைவர்களிடையேயான சந்திப்பு நடக்க வாய்ப்பில்லை என்றால், அதாவது போர் நிறுத்தம் இல்லாவிட்டால் ரஷ்யாவுக்கு எதிராக தடைகளை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் விதிக்க வேண்டும். ரஷ்யா, உக்ரைனின் உள்கட்டமைப்புகளை அழிக்கிறது. பொது மக்களை அச்சத்தில் ஆழ்த்துகிறது. எனவே, ரஷ்யாவுக்கு எதிராக சர்வதேச பதிலடி தேவை. உக்ரைன் தன்னையும் ஐரோப்பாவையும் பாதுகாக்க முடியும் என்பதை நிரூபித்துள்ளது. நாம் ஒன்றாக செயல்பட வேண்டும்.

வான் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். ஆயுத விநியோகங்களை அதிகரிக்க வேண்டும். ரஷ்ய இராணுவத்துக்கு நிதி அளிக்கும் துறைகளுக்கு எதிரான தடைகளை விரிவுபடுத்த வேண்டும். ரஷ்யா மீதான ஒவ்வொரு கட்டுப்பாடும் உயிர்களைக் காக்கிறது. எங்களுக்கு உதவும், ஆதரிக்கும் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்," என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# பெண்கள் எழுதிய புத்தகங்களுக்கு தடை விதித்தது தலிபான் அரசு

ஆப்கானிஸ்தானில் பெண்கள் எழுதிய புத்தகங்களுக்கு தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்கு பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

இதன்படி பெண்கள் வெளியே செல்லவும், கல்வி கற்கவும் பணிபுரியவும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அங்கு பெண் உரிமை, பாலினம் உள்ளிட்டவை குறித்து பெண்கள் எழுதிய புத்தகங்கள், பல்கலைக்கழக பாடங்களில் இடம்பெற்றிருந்த நிலையில் அவை நீக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள புதிய கல்விச் சட்டத்தின்படி தலிபான்கள் கொள்கைகள் மற்றும் ஷரிஆ சட்டத்திற்கு எதிராக இருப்பதால் பெண்கள் எழுதிய 140 புத்தகங்கள், ஈரானிய எழுத்தாளர்களின் 310 புத்தகங்கள் என மொத்தமாக 680 புத்தகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஷரிஆ சட்டத்துடன் முரண்படுவதாகக்கூறி, ஆப்கானிஸ்தான் பல்கலைக்கழக பாடங்களில் பெண்கள் எழுதிய புத்தகங்களுக்கு தலிபான் அரசு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 21/09/2025

## உலகத் திருக்குறள் மாநாடு கனடாவில் நடைபெறுகின்றது



C2 ▶



# புதிய கட்டத்தில் கனடா - இந்திய உறவுகள்; மீண்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப முயற்சி



கடந்த சில ஆண்டுகளில் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த இந்தியா-கனடா இருநாட்டு உறவுகள், தற்போது புதிய கட்டத்திற்கு நகரும் முயற்சியில் உள்ளன.

கடந்த வியாழக்கிழமை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் கனடாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாதலி ட்ரூயின் ஆகியோர் புதுடில்லியில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர்.

C2 ▶

# சீன வாகனங்களுக்கான வரியைக் குறைக்கக்கூடாது

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவிப்பு



சீன வாகனங்களுக்கான வரி குறைக்கப்படக்கூடாது என ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் வலியுறுத்தியுள்ளார்.

சீனாவில் தயாரிக்கப்படும் மின்சார வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 100 வீத வரியை தொடர வேண்டும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னியிடம் அவர் கோரியுள்ளார்.

இந்த வரி விதிப்பு நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மீளாய்வு செய்யத் திட்டமிட்டுள்ள நிலையில் அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

வரி நீக்கம் குறித்து கவனம் செலுத்தப்படுவதாக விவசாய அமைச்சர் ஹீத் மெக்டொனால்ட் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

சீனா கனோலா போன்ற உள்நாட்டு பயிர்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தும் பட்சத்தில் இந்த வரியை நீக்குவதற்கு

C2 ▶






# உலகத் திருக்குறள் மாநாடு கனடாவில் நடைபெறுகின்றது

கனடாவில் 6 ஆவது உலகத்திருக்குறள் மாநாடு நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டில் சிறப்புரை ஆற்றுவதற்காக கலாநிதி ஆறுதிருமுருகன் கனடா சென்றுள்ளார்.

கனடா சென்றடைந்த விமான நிலையத்தில் விழாக்குழுவினர் கலாநிதி ஆறுதிருமுருகனை வரவேற்றனர்.

மகத்தான திருக்குறளின் பெருமைகளை உலகறியச் செய்ய, செப்டம்பர் 19, 20, 21 ஆகிய மூன்று நாள்கள் டொராண்டோ பல்கலைக்கழகத்தில் உலகத் திருக்குறள் மாநாடு நடைபெறுகின்றது.

இதன்போது, இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் விதமாகவும், இளையவர்களுக்குத் திருவள்ளுவத்தின் மேன்மைகளை உணர்த்து முகமாகவும் பல நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

# ஒரே நாளில் கோடீஸ்வரியாகினார் கால்கரியைச் சேர்ந்த பெண் ஒருவர்

கனேடிய பெண்ணொருவர், சிறு படகொன்றை வாங்குவதற்காக சென்றபோது வாங்கிய லொட்டரி அவரை ஒரே நாளில் கோடீஸ்வரியாக்கிவிட்டது.

கனடாவின் கால்கரியைச் சேர்ந்த Pam Millage, kayak என்னும் சிறு படகொன்றை வாங்கச் சென்றுள்ளார்.

அப்போது அவர் ஒரு லொட்டரிச் சீட்டும் வாங்கியுள்ளார். உடனடியாக சுரண்டிப்பார்த்து பரிசு விழுந்ததா என கண்டறியும் அந்த லொட்டரியை வாங்கி, தனக்கு ஏதாவது பரிசு விழுந்துள்ளதா என பார்த்தீஅக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

Pam வாங்கிய லொட்டரிச்சீட்டுக்கு ஒரு மில்லியன் கனேடிய டொலர்கள் பரிசு விழுந்துள்ளது.




ஒரே நாளில் கோடீஸ்வரியாகி விட்டாலும், இப்போதைக்கு பெரிதாக திட்டங்கள் எதுவும் இல்லை என்கிறார் Pam.

சமீபத்தில்தான் தனது மகனுடைய கார் பழுதானதாகவும், அதனால் மகனுக்கு உதவி செய்ய இருப்பதாகவும், கணவருடன் வெளிநாட்டு சுற்றுலா செல்லும் ஆசை உள்ளதாகவும் மட்டும் அவர் தெரிவித்துள்ளார் .

**சீன வாகனங்களுக்கான..**

கனடியர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

நானோஸ் ரிசர்ச் நடத்திய கருத்துக் கணிப்பில் 62 வீத கனேடியர்கள் இவ்வாறு தங்களது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, கனடாவில் மின்சார வாகன விற்பனை 39.2 வீத வீழ்ச்சி கண்டுள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

2020 முதல் 46 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரி விநியோக சங்கிலி முதலீடுகளை இந்த வரி பாதுகாத்து வருவதாகவும், அதை நீக்குவது ஒன்ராரியோவில் உள்ள 1,57,000 நேரடி வேலைகளையும், நாட்டளவில் உள்ள நூற்றுக்கணக்கான ஆயிரம் மறைமுக வேலை வாய்ப்புகளையும் ஆபத்தில் ஆழ்த்தும் என போர்ட் தனது புதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**புதிய கட்டடத்தில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2023 இல் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை விவகாரத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட திடீர் விரிசலுக்குப் பிறகு, இரு நாடுகளும் மீண்டும் நம்பகத்தன்மையை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

இரு தரப்பும் பயங்கரவாதம், சர்வதேச குற்றங்கள் மற்றும் உளவுத்துறை பரிமாற்றங்கள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புக்கொண்டன.

இந்த சந்திப்புக்கு முன்னதாக, ஜூன் மாதத்தில் ஜி 7 உச்சி மாநாட்டின்போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி சந்தித்து, உறவுகளை மீட்டமைக்க நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ள ஒப்புக்கொண்டனர்.

தற்போது, இரு நாடுகளும் தங்களது தூதர்களை மீண்டும் நியமித்துள்ளன.

“இரு தரப்பும் அரசியல் தலைமை மட்டத்தில் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க உறுதியுடன் செயல்படுகின்றன.” என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால ஒத்துழைப்புக்கான முக்கிய பிரிவுகள் மற்றும் பிராந்திய, உலகளாவிய நிலவரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.